## ஜனவரி – 04 – வெள்ளி

### புனித எலிசபெத் ஆன் செற்றன்

**ஆண்டவருக்குப் புதியதொரு பாடல் பாடுங்கள்: ஏனெனில், அவர் வியத்தகு செயல்கள் புரிந்துள்ளார். திபா. 98:1**

### முதல் வாசகம் : 1 யோவான் 3 : 7 – 10

பிள்ளைகளே, எவரும் உங்களை நெறிதவறச் செய்யவிடாதீர்கள். கிறிஸ்து நேர்மையாளராய் இருப்பதுபோல் நேர்மையாய்ச் செயல்படுபவர் நேர்மையாளராய் இருக்கின்றார். பாவம் செய்துவருகிறவர் அலகையைச் சார்ந்தவர் ஏனெனில் தொடக்கத்திலிருந்தே அலகை பாவம் செய்து வருகிறது. ஆகவே அலகையின் செயல்களைத் தொலைக்கவே இறைமகன் தோன்றினார். கடவுளிடமிருந்து பிறந்தவர் எவரும் பாவம் செய்வதில்லை ஏனெனில் கடவுளின் இயல்பு அவரிடம் இருக்கிறது. கடவுளிடமிருந்து பிறந்தவராயிருப்பதால் அவரால் பாவம் செய்ய இயலாது. நேர்மையாய்ச் செயல்படாதவரும், தம் சகோதரர் சகோதரிகளிடம் அன்பு செலுத்தாத வரும் கடவுளிடமிருந்து வந்தவர்களல்ல. இதனால் கடவுளின் பிள்ளைகள் யாரென்றும் அலகையின் பிளளைகள் யாரென்றும் புலப்படும்.

**பதில்பாடல் :** மாந்தர் அனைவரும் நம் கடவுள் அருளிய
விடுதலையைக் கண்டனர்.

### நற்செய்தி : யோவான் 1 : 35 – 42

யோவான் தம் சீடர் இருவருடன் மீண்டும் அங்கு நின்று கொண்டிருந்தார். இயேசு அப்பக்கம் நடந்து சென்று கொண்டிருந்தார். யோவான் அவரைக் கூர்ந்து பார்த்து, ”இதோ! கடவுளின் ஆட்டுக்குட்டி” என்றார். அந்தச் சீடர் இருவரும் அவர் சொன்னதைக் கேட்டு இயேசுவைப் பின்தொடர்ந்தனர். இயேசு திரும்பிப் பார்த்து, அவர்கள் தம்மைப் பின்தொடர்வதைக் கண்டு, ”என்ன தேடுகிறீர்கள்?” என்று அவர்களிடம் கேட்டார். அவர்கள், ”ரபி, நீர் எங்கே தங்கியிருக்கிறீர்?” என்று கேட்டார்கள். அவர் அவர்களிடம், ”வந்து பாருங்கள் ”என்றார். அவர்களும் சென்று அவர் தங்கியிருந்த இடத்தைப் பார்த்தார்கள். அப்போது ஏறக்குறைய மாலை நான்கு மணி. அன்று அவர்கள் அவரோடு தங்கினார்கள். யோவான் சொன்னதைக் கேட்டு இயேசுவைப் பின்தொடர்ந்த இருவருள் ”அந்திரேயா ஒருவர். அவர் சீமோன் பேதுருவின் சகோதரர். அவர் போய் முதலில் தம் சகோதரரான சீமோனைப் பார்த்து, ”மெசியாவைக் கண்டோம்” என்றார். ”மெசியா” என்றால் அருள்பொழிவு பெற்றவர் என்பது பொருள். பின்பு அவர் சீமோனை இயேசுவிடம் அழைத்து வந்தார். இயேசு அவரைக் கூர்ந்து பார்த்து, ”நீ யோவானின் மகன் சீமோன். இனி ”கேபா” எனப்படுவாய் என்றார். ”கேபா” என்றால் ”பாறை” என்பது பொருள்.

**தியானம்:** சாட்சியம் என்பது எமது வாழ்க்கையில் முக்கியமானதொன்றாகும். இறைவனும் அதைத்தான் எங்களிடம் எதிர்பார்க்கின்றார். ஏனெனில் அவர் எமக்கு பலவழிகளில் நன்மைகள் செய்து கொண்டிருக்கின்றார். தேவைகளை நிறைவேற்றியிருக்கின்றார். அவருக்கு நன்றி சொல்வது சான்று பகிர்ந்து சாட்சிகளைப் பகிர்ந்து கொள்ளும் பொழுது இறைவனை நாங்கள் மகிமைப்படுத்துகின்றோம். இதை நாஙகள் நன்கு உணர்ந்து கொள்ள வேண்டும். அன்று இயேசு பத்து தொழுநோயாளர்களைக் குணப்படுத்தின்றார். ஆனால் அவருக்கு நன்றி சொல்ல வந்தவர் ஒருவர் மட்டுமே. அப்பொழுது தான் அவர் வந்து நன்றி கூறியவரிடம் “மிகுதி ஒன்பது பேரும் குணமடையவில்லையா” என்று வினவுகின்றார். இன்றைய வாசகத்திலும் கூட இறைவன் இஸ்ராயேல் மக்களுக்கு பலவழிகளில் நன்மைகள் செய்தும் கூட அவர்கள் அதை மறந்தவர்களாக தங்களுக்கென்று பொற்கன்று சிலையொன்றை உருவாக்கி அதை கடவுளாக வணங்கி வந்தார்கள். இறுதியில் தணடனைத் தீர்ப்புக்கு உள்ளானார்கள். இன்று நாம் கூட இறைவன் செய்வதை மறந்து தற்பொழுது எம்மத்தியில் இயேசு இருக்கிறார் என்பதை உணராது வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இவ்வாறாக இறைவனை மறந்து வாழ்ந்தோமேயானால் எமக்கும் தண்டனை நிற்சயம் உண்டு என்பதை மறந்துவிடக்கூடாது. அன்று யோவான் மனிதருடைய சான்றைவிட மேலான ஒருவர் இருக்கிறார் அவரே தனது பரலோக தந்தை என்பதையும் தான் செய்யும் செயல்களின் மூலமே அவர் சான்று பகிர்கின்றார் என்பதையும் வெளிப்படுத்துகின்றார். எனவே இதை ஏற்றுக்கொண்டு இயேசுவைக் கண்டுகொள்ள எமது பேசும் சொற்கள் செய்யும் செயல்கள் யாவற்றிலும் அவருக்கு நன்றி கூறி சான்று பகிரும் மக்களாக எம்மை மாற்றிக் கொள்வோம்.